ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜுன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# கந்தபுராணத்தில் நான்கு நெறிகளும் வீடுபேறும்

க. பவித்ரா,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்,
கோயம்புத்தூர் -43.

முனைவர்பரணி.சு.,
நெறியாளர் & உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர் -43.

ஆய்வுச்சுருக்கம்

கந்தபுராணம் முழுமுதற்கடவுளான சிவபெருமானை வழிபடும் முறைகள் குறித்து விளக்கியுரைக்கும் புராணக் காப்பியமாக அமைகின்றதுஇறைவனின் சிறப்பியல்புகளையும் . இறைவனைக் கோயிலுக்குச் சென்று .கந்தபுராணம் எடுத்துரைக்கின்றது தொழுது வணங்கி, திருப்பணிகள் பல செய்து தொண்டாற்ற வேண்டும் என்பதை அருளாளர்கள் பலர் தங்கள் வாழ்வில் கடைப்பிடித்து வாழ்ந்து இன்றைய மக்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்கின்றனர் . இறைவன் .கந்தபுராணமும் மக்களிடையே இறை பக்தியை மேம்படுத்தவே முயற்சிக்கின்றது மீதான அன்பும் பக்தியும் பெருகும்போது மக்கள் இறை வழிபாடுகளை மேற்கொள்ளத் தொடங்குவர்இச்செயல்பாடுகள் சரியை ., கிரியை, யோகம், ஞானம் என்னும் முத்திப் படிநிலைகளை அடைய வழிவகுக்கும்இத்தகைய . படிநிலைகள் குறித்து கந்தபுராணம் எடுத்துரைக்கும் விதத்தினையும் அந்தப் படிநிலைகளின் பயனாக கிடைக்கப்பெறும் வீடுபேறு குறித்தும் ஆராய்வதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.

முன்னுரை

சைவ சித்தாந்தமானது உயிர்கள் உய்வடையக் கூடிய வழி வீடுபேறே என்றுரைக்கிறது . அவ்வீடுபேற்றினைப் பெற வேண்டுமானால் உயிர்கள் நான்கு நெறிகளைக் கடைப்பிடித்தல் அவை சரியை .அவசியமாகும், கிரியை, யோகம், ஞானம் ஆகியவையாம்சைவ சித .்தாந்தம் கூறும் இக்கருத்துகள் கந்தபுராணத்தில் இடம்பெற்றுள்ள விதம் இக்கட்டுரையில் ஆராயப்படுகிறதுநான்கு நெறிகளும் வீடுபேறும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையதால் . கந்தபுராணம் கூறும் வழிபாட்டு .இரண்டையும் இணைத்துக் காண வேண்டியது அவசியமாகும் முறைகள் வீடுபேற்றினை வலியுறுத்துகின்றதா எனக் காண்பதே இவ்வாய்வின் கருதுகோளாக அமைகின்றதுசரியை முதலான நெறிகளை விளக்குமிடத்து விளக்கமுறை அணுகுமுறையும் ., வீடுபேற்றினை விளக்குமிடத்து தத்துவவியல் அணுகுமுறையும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

திறவுச் சொற்கள்

கந்தபுராணம் வீடுபேறு - ஞானம் - யோகம் - கிரியை - சரியை -

சைவமும் சைவ சித்தாந்தமும்

சிவபெருமானை முழுமுதற்பொருளாகக் கொண்ட சமயம் சைவ சமயம் ஆகும்சைவ . அருணாசலம் அவர்கள்.ப.சமயம் குறித்து டாக்டர், 'சைவம் என்பதை விளக்கும் திருமூலர் 'சைவம் சிவனுடன் சம்பந்தமாவது' என்பர்எல்லாப் பொருள்களையும் கடந்த . நிலையிலும், எல்லாப் பொருட்களிலும் ஊடுருவியும் நிற்கும் பரம்பொருளையே 'சிவன்' எனக் கூறினாலும்,

அப்பரம்பொருள் நம்மோடு தொடர்பு கொள்ள எடுத்துக் கொண்ட திருக்கோலமும் அத்திருக்கோலத்தைக் குறிக்கும் திருநாமமும் இங்குப் பரம்பொருளைச் 'சிவன்' எனக் குறித்தற்குக் காரணமாகும்இத்திருக்கோலத்தின் வாயிலாகவும் இத்திருநாமத்தின் வாயிலாகவும் . பரம்பொருளோடு தொடர்பு கொண்டு வாழ்தலே'சைவம்' எனல் வேண்டும்'[1] என்று விளக்கிக் கூறுகிறார் .

சைவ சமய மெய்ப்பொருள் கருத்துகளின் தொகுப்பு சைவ சித்தாந்தம் என வழங்கப்படுகின்றது .இது வேதங்கள் மற்றும் ஆகமங்களைப் பிரமாணமாகக் கொண்டதாகும் . 'சித்தாந்தம் என்பது சித்த அந்தம் என்ற இரு சொற்களால் ஆகி முடிபின் முடிபு என்று பொருள் பெறும்சைவ நூல்களின் முடிந்த முடிபைக் கூறும் நூல்களைச் சைவ சித்தாந்த மென்ப .'[2] என்று சித்தாந்தத்திற்கு விளக்கம் தரப்படுகிறதுசைவ சித்தாந்தம் பதி ., பசு, பாசம் ஆகிய முப்பொருள்களைக் குறித்தும், பதி எனும் இறைவனை அடையும் வீடுபேற்றுப் படிநிலைகளையும் எடுத்துரைக்கின்றது.

*நான்கு நெறிகள்*

இறைவனை அடைந்து ஆன்மாக்கள் வீடுபேற்றினை அடைவதற்கு நான்கு நெறிகளை சைவ சித்தாந்தம் எடுத்துரைக்கின்றதுஅவை ., சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகியனவாகும் . இறைவனை நோக்கிச் செய்யப்படும் .இவை பதி புண்ணியங்கள் எனக் கூறப்படுகின்றன சரியை முதலான நான்கு நெறிகளை .அனைத்து நற்செயல்களும் பதி புண்ணியங்களாகும் சிவஞான சித்தியார்,

சன்மார்க்கம் சகமார்க்கம் சற்புத்ர மார்க்கம்
தாசமார்க் கம்என்றும் சங்கரனை அடையும்
நன்மார்க்கநாலவைதாம் ஞான யோகம் (ம்)
நற்கிரியா சரியைஎன நவிற்றுவதும் செய்வர்
சன்மார்க்க முத்திகள்சா லோக்கியசா மீப்ய
சாரூப்ய சாயுச்யம் என்றுசதுர் விதமாம்
முன்மார்க்க ஞானத்தால் எய்து முத்தி
முடிவென்பர் மூன்றினுக்கு முத்திபதம்என்பர்[3]

எனக் குறிப்பிடுகின்றதுசரியை ., கிரியை, யோகம் ஆகிய மூன்றும் இறுதியில் ஞானத்தைத் தருகின்றதுஎனவே ., எந்த நெறியைப் பின்பற்றினாலும் இறுதியில் ஞானம் பெற்று இறைவனை அடைய முடியும் எனக் கூறப்படுகின்றது.

*சரியை*

சரியை உடலால் செய்யும் செயல்களைக் குறிக்கும்இறைவனை தலைவனாக நினைத்து ., உயிர்கள் தங்களை தொண்டர்களாகக் கருதி, தொண்டுகள் செய்வதே சரியை நெறியாகும் . கோயில்களைச் சுத்தம் செய்வது, மலர்களைக் கொய்து மாலைகள் தொடுத்து வழிபடுவது, விளக்கேற்றுவது முதலானவை சரியை நெறியைச் சேரும்இத .னை தாசமார்க்கம் (அடிமை நெறி) என்னும் (இறையுலகை அடைதல்) இந்நெறியைக் கடைப்பிடிப்போர் சாலோகம் .என்று கூறுவர் .இந்நெறிக்கு எடுத்துக்காட்டாக அப்பர் பெருமான் குறிப்பிடப்படுகிறார் .பதவியினைப் பெறுவர்

*கிரியை*

சிவபெருமானுடைய திருமேனிகளுக்கு மந்திரம், கிரியை, பாவனை ஆகிய முறைகளைக் கொண்டு வழிபாடுகள் செய்வது கிரியை நெறியாகும்மந்திரங்கள் செபித்தல் ., திருமுறைகளை ஓதுதல், பூசைக்குத் தேவையான பொருட்களைச் சேகரித்தல் முதலானவை கிரியை வழிபாட்டினுள் அடங்கும்சரியை நெறியைக் கடைப்பிடிப்பவர்களை விட கிரியை நெறியைக் . கடைப்பிடிப்போர்சிவ சிந்தனையில் அதிக நேரம் ஈடுபடும்படி அமையும்இந்நெறி சற்புத்திர . இந்நெறியைக் கடைப்பிடிப்போர் சாமீபம் .என்று அறியப்படுகிறது (மகன்மை நெறி) மார்க்கம் திருஞானசம்பந்தர் மகன்மை .என்னும் பதவியினைப் பெறுவர் (இறைவனை அணுகுதல்) .நெறிக்கு உதாரணமாகத் திகழ்கிறார்

*யோகம்*

*யோகம் என்பதற்கு ஒன்றுதல் என்பது பொருளாகும்உடற்கருவிகளை ஒடுக்கி . புறவுலக விஷயங்களில் .இறைவனோடு ஒன்றியிருக்கும் நிலையே யோகம் எனப்படுகிறது இந்த யோக நிலை .திரியும் மனதைக் கட்டுப்படுத்தி யோகத்தில் அமர்வது எளிமையானது அல்ல இயமம் : அவை .எட்டுப் படிநிலைகளைக் கொண்டதாகும், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி ஆகியவையாம்இவற்றை அட்டாங்க யோகம் என்று . இந்நெறிக்கு .எனவும் அறியப்படுகிறது (தோழமை நெறி) இந்த யோக நெறி சகமார்க்கம் .கூறுவர் .சுந்தரர் எடுத்துக்காட்டப்படுகிறார்*

*ஞானம்*

*மெய்ப்பொருட் கருத்துகளை நன்குணர்ந்து மெய்யறிவு பெறும்போது ஞானத்திற்கான பாதையினை அறிய முடியும்இது கேட்டல் ., சிந்தித்தல், தெளிதல், நிட்டைகூடல் என்னும் நான்கு நிலைகளைக் கொண்டதாகும்குருவின் மூலமாக மெய்ப்பொருட் கருத்துகளைக் கேட்டல் ., அவற்றை மீண்டும் சிந்தித்தல், தனக்கு ஏற்படும் சந்தேகங்களைக் கேட்டுத் தெளிதல், அதன்பின் மெய்யுணர்வு பெற்று ஞானநிட்டையில் இறைவனோடு கலத்தல் ஆகியவையே ஞானத்தின் நிலைகளாகும்இந்நெறியைக் .இது சன்மார்க்கம் எனக் குறிப்பிடப்படுகிறது . இறைவனோடு இரண்டறக் கல) கடைப்பிடிப்பதினால் உயர்ந்த நிலையான சாயுச்சியத்தல் ( .இதற்குச் சிறந்த உதாரணம் மாணிக்கவாசகர் ஆவார் .நிலையினைப் பெறலாம்*

*கந்தபுராணத்தில் நான்கு நெறிகள்*

*சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நெறிகளைக் கந்தபுராணம் எடுத்துரைக்கின்றது . சனகாதி முனிவர்கள் சரியை முதலான முதல் மூன்று நெறிகளை உணர்ந்து கொண்டாலும் ஞானத ்தை உணர்தல் கடினமாக உள்ளது என சிவபெருமானிடம் முறையிடுகின்றனர் . சிவபெருமானும்,*

*.......... மூவகைப் பதமும் கூறி*
*இனியதோர் ஞான போதம் இத்திறம் என்று மோனத்*
*தனிநிலை அதனைக் காட்டி பு.கந்த), 329:2-4)*

*என, பக்குவ நெறிகளைப் போதித்து, ஞானத்தை உணர்த்துகின்றார்ஞானத்தை வாயால் கூறி . எளிமையாகப் புரிய வைக்கும் தன்மை உடையது அல்ல எனக் கூறி, கரதலம் ஒன்று சேர்த்தி மோனமுத திரையைக் காட்டி பு.கந்த), 422:3) என்று சின்முத்திரைக் காட்டி தியான நிலையில் நின்று ஞானத்தை உணர்த்துகின்றார்சிவபெருமானுக்கு தக்கன் அக .ப்பூசை செய்து வழிபட்ட திறத்தினைக் குறிப்பிடும்பொழுது,*

*காலை நேர்பெற ஓட்டியே கனலினை மூட்டிப்*
*பால மார்பயன் வீட்டியே தன்னுறு படிவத்(து)*
*ஏலும் அன்பினில் மஞ்சனம் ஆட்டியே இறைக்குச்*
*சீல மாமலர் சூட்டிஉட் பூசனை செய்தான் பு.கந்த), 8315)*

*எனக் கூறப்படுகின்றதுகால் என சொல்லக்கூடிய பிராணவாயுவைக் கொண்டு மூலாக்கினியை . அதன் மூலம் நெற்றியில் உள்ள அமிழ்தத்தை இளகச் செய்து .எழுப்புகிறான், தன் அன்பு என்னும் நீரால் இறைவனுக்கு அபிடேகம் செய்து மலர்கள் அணிவித்துப் பூசை செய்கிறான் எனக் கூறப்படுகின்றது .*

*சரியை, கிரியை நெறிகளான ஆலய வழிபாடுகள், ஆகமப் பூசை முறைகளையும் கந்தபுராணம் குறிப்பிடுகின்றதுஉதாரணமாக ., இந்திரன் சிவபெருமானுக்கு நந்தவனம் ஒன்று அமைத்து பூசை செய்கிறான் .பூசை புரிதும்என் உன்னி ஆண்டோர் நந்தன வனத்தை வைப்பான் (று) பு.கந்த), 2927:3-4) என்றும், அமரர்கோன் துணைவியோடு மற்அவண் வேணு ஆகி (று) பு.கந்த) இருந்தோன் மாதோ (று)மறைந்துநோற், 2931:3-4) என்றும் இந்திரன் மூங்கில் வடிவில் இருந்து பூசித்தமையை அறியலாம் .*

*விடியல்வை கறைதனில் மேவி வண்டுதேன்*
*புடையுறு முன்னரே புரையி லாததோர்*
*கடிமலர் கொய்தனன் கொணர்ந்து கண்ணுதல்*
*அடிகளில் விதிமுறை அருச்சித் தான்அரோ பு.கந்த), 3165)*

*என, இரவு நீங்கும் முன்பே இந்திரன் பூந்தோட்டத்திற்குச் சென்று வண்டுகள் தேனை உறிஞ்சி எடுப்பதற்கு முன்பாகவே அம்மலர்களைப் பறித்து வந்து விதிமுறைப்படி வழிபடும் செய்தியினை கந்தபுராணம் எடுத்துரைக்கின்றது.*

*வீடுபேறு*

*உயிர்கள் சிற்றறிவு கொண்டதாகும்இவ்வுலகில் உயிர்கள் இன்பத்தையும் துன்பத்தையும் . உயிர்கள் பிறவிச் சுழலில் இருந்து நீங்க வேண்டுமானால் .மாறி மாறி அனுபவித்து வருகின்றது, அவ்வுயிர்கள் இறைவனை அடைந்து பேரின்பத்தைப் பெற்றிடல் வேண்டும்அந்தப் . உயிர்கள் மீண்டும் பிறவிக்கு வராத நிலையே வீடுபேறு .பேரின்பப்பேறே வீடுபேறு ஆகும் .எனப்படுகிறது'வீடு என்பது பாசத்தை விடுவது, பேறு என்பது சிவத்தைப் பெறுவதுஆக . வீடுபேறு என்பது உயிர்க்குள்ள ஆணவமல மறைப்பு அறவே நீங்கப் பெற்று உயிர் சிவமாம் தன்மைபெற்று மாறாத பேரின்பத்தில் இருப்பது என்பதாகும்.'[4]*

*ஆன்மாக்கள் பிறப்பிற்கு வருவதற்கு முன்பு எப்படி ஆணவ மலத்தைப் பற்றி நிற்கின்றதோ, அதுபோல ஆன்மாக்கள் வீடுபேறு அடையும் காலத்தே இறைவனைப் பற்றி நிற்கும்தாயுமானவரும் இதனை .இதுவே அத்துவித நிலையாகும் .,*

*ஆணவத்தோடு அத்வைதம் ஆனபடி மெய்ஞானத்*
*தாணுவினோடு அத்வைதம் சாருநாள் எந்நாளோ*[5]

*எனக் கூறுகின்றார்இவ்வீடுபேறு குறித்த செய்திகளைக் கந்தபுராணம் பலவிடங்களில் . .வலியுறுத்திக் கூறுகின்றது*

*கந்தபுராணம் சுட்டும் வீடுபேறு*

*கந்தபுராணத்தின் நோக்கமே மக்கள் வீடுபேறு பெறவேண்டும் என்பதை வலியுறுத்துவது தான்மக்கள் இப்புராணத்தைப் படித்து ., மெய்யறிவு பெற்று, இன்பமடைந்து இறுதியில் வீடுபேற்றினைப் பெற வேண்டும் என,*

*இந்திரர் ஆகிப் பார்மேல் இன்பமுற்இனிது மேவிச் (று)*
*சிந்தையில் நினைந்த முற்றிச் சிவகதி அதனில் சேர்வர்*
*அந்தமில் அவுணர் தங்கள் அடல்கெட முனிந்த செவ்வேல்*
*கந்தவேள் புராணம் தன்னைக் காதலித்பு.கந்த) ஓது வோரே (து), 4)*

*என்னும் பாடல் விளக்குகிறதுவீடுபேறு ., இறத்தல், பிறத்தல் ஆகியவை இல்லாதது என்பதனை, மாண்டிடல் பிறத்தல் இன்றி மன்னிய வீடும் பு.கந்த), 254:3) என்பதினால் அறியலாம்நான்கு . நெறிகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் வீடுபேற்றினைப் பெறலாம் என்று கூறப்படுகிறது .*

*ஆதியார் தாளினை அருளொடே வழிபடும்*
*நீதியாம் நீரினார் நிலைமையாய் நின்றிடும்*
*பாதம்நான்அதனுளே (கு)அவர்பெறும் பதமும்நான் (கு)*
*ஓதியார் பெறுவதோர் உயர்பெருங் கதியதே பு.கந்த), 8386)*

*என்னும் பாடல், இறைவனை வழிபடும் நெறிமுறைகள் நான்கு, அந்நான்கு முறைகளால் கிடைக்கப்பெறும் பதவிகளும் நான்கு என்பதனை விளக்குகிறதுசாலோகம் ., சாமீபம், சாரூபம், சாயுச்சியம் ஆகிய நான்கு பதவிகளில் ஞான நெறியினால் கிடைக்கப்பெறும் சாயுச்சிய நிலையே மிகவும் உயர்ந்தது என்றும் கூறுகிறது .*

*ஆன்மாக்கள் சிவபெருமானை சென்றடைந்ததும் உயிர்களைச் சார்ந்திருக்கும் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களும் நீங்கும்பிறப்புகள் .அவை நீங்கினால் பிறப்பும் நீங்கும் . அகன்ற நிலையில் உயிர்கள் பேரின்பத்தினை அனுபவிக்கும் என்னும் கருத்தினை,*

*சேர்ந்துழிப் பிறவியும் தீரும் தொன்மையாய்ச்*
*சார்ந்திடு மூவகைத் தளையும் நீங்கிடும்*
*பேர்ந்திடல் அரியதோர் பேர்இன் பந்தனை*
*ஆர்ந்திடும் அதன்பரிபு.கந்த) ஏயுமோ (கு)அறைதற் (சு), 1973)*

*என்கிற பாடல் விளக்கியுரைக்கிறது எத்தகைய தீமை புரிந்தவராக இருப்பினும் .இறைவனின் அருட்பார்வை கிடைத்துவிட்டால் அவர்கள் தூய்மையானவராக மாறி, உயர் பெரும் பேற்றைப் பெறுவார்கள் என்னும் கருத்தை வலியுறுத்தும் விதமாக,*

*தீயவை புரிந்தா ரேனும் குமரவேள் திருமுன் உற்றால்*

*தூயவர் ஆக மேலைத் தொல்கதி அடைவர் என்கை*
*ஆயவும் வேண்டும் கொல்லோ அடுசமர் இந்நாள் செய்த*
*மாயையின் மகனும் அன்றோ வரம்பிலா அருள்பெற்பு.கந்த) உய்ந்தான் (று), 7783)*

*என்னும் பாடல் அமைகின்றதுசூரபன்மன் தேவர்களைத் துன்புறுத்தி கொடுமைகள் பல . .செய்திருந்தாலும் அவனுடைய தவத்திற்கான பலன்கள் நிச்சயம் கிடைக்கப்பெறுகின்றது அவனை தீயவழியில் செல ுத்திய மலப்பிணிப்புகளை முருகப்பெருமான் நீக்கி அவனை சேவலும் மயிலுமாக மாற்றி அருள்புரியும் தன்மையினால் இதனை நன்குணரலாம்.*

*முடிவுரை*

*ஆன்மாக்கள் உய்வடைவதற்கான நான்கு நன்நெறிகளையும் கந்தபுராணம் விளக்கியுரைக்கிறதுசரியை ., கிரியையில் இடம்பெறும் வழிபாடுகள் குறித்தும், யோகத்தில் நிகழ்த்தப்பெறும் தியானம், தவம் முதலான நிலைகளையும், மெய்யுணர்வு பெறச் செய்யும் ஞான நிலையினையும் கந்தபுராணம் வலியுறுத்தி, அதன் மூலமாக வீடுபேற்றினைப் பெற்று மக்கள் உயர்வடைய வேண்டும் என்கிற கருத்தினை கந்தபுராணம் பதிவு செய்கின்றது.*

*சான்றெண் விளக்கம்*

1. *சைவ சமயம் ஓர் அறிமுகம், டாக்டர்.ப.அருணாசலம், ப.1*
2. *சைவ சித்தாந்த வரலாறு, கா.சுப்பிரமணிய பிள்ளை, ப.1*
3. *சிவஞானசித்தியார், சுபக்கம், செய்யுள் : 270.*
4. *சைவ சித்தாந்த தடைகளும் விடைகளும் குறியீட்டுச் சொல் அகராதியும், திரு.கு.வைத்தியநாதன், ப.102*
5. *தாயுமானவர் பாடல்கள், 45:14:28.*

*துணை நின்ற நூல்கள்*


1. *டாக்டர்.ப.அருணாசலம் (2002), சைவ சமயம் (ஓர் அறிமுகம்), முல்லை நிலையம், சென்னை.*
2. *முனைவர் அ.அறிவொளி (உ.ஆ) (2005), மெய்கண்ட சாத்திரம் மூலமும் உரையும், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை.*
3. *சிவ.சண்முகசுந்தரம் (உ.ஆ) (2019), கந்தபுராணம் மூலமும் உரையும் (6 பகுதிகள்), பாரி நிலையம், சென்னை.*
4. *புலவர்.வீ.சிவஞானம் (உ.ஆ) (2016), தாயுமானவர் சுவாமி பாடல்கள் மூலமும் உரையும், விஜயா பதிப்பகம், கோயம்புத்தூர்.*
5. *பேராசிரியர் கா.சுப்பிரமணிய பிள்ளை (2007), சைவ சித்தாந்த வரலாறு, சாரதா பதிப்பகம், சென்னை.*
6. *திரு.கு.வைத்தியநாதன் (1995), சைவ சித்தாந்த தடைகளும் விடைகளும் குறியீட்டுச் சொல் அகராதியும், திருவாவடுதுறை ஆதீன சைவ சித்தாந்த நேர்முகப் பயிற்சி மையம், திருவிடைமருதூர்.*


********* ********* ********** ********* ********* ********** ********** **********